www.padippakam.com

Raya 10F

RAYA
87 RUE DE COLOMBES
92600 A..IERES SUR -
- SEINE , FRANCE

# இந்திய—இலங்கை உடன்பாடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய—இலங்கை உடன்பாடு குறித்து 1987 ஜூலை 31-ஆம் நாளன்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ராஜ்யசபாவில் சமர்ப்பித்த அறிக்கை

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே,

கொழும்பில் சிறிய ஆனால் சிறப்பு வாய்ந்த பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுதான் நான் திரும்பினேன். அந்தப் பயணத்தின் விளைவை உடனடியாக அவைக்கு உறுதியுடன் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இந்தப் பயணத்தை சிறப்பு வாய்ந்ததாக கருதுவதற்குக் காரணம், இலங்கை அதிபர் மேதகு ஜெயவர்த்தனாவும் நானும் ஜூலை மாதம் 29-ம் தேதியன்று ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டோம். பல ஆண்டுகளாக நம் அண்டை நாடான இலங்கையைப் பாதித்த கடுமையானப் போராட்டத்திற்கு முடிவு காணும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்தது. இலங்கை குடிமக்களுக்கு இடையில் நிகழ்ந்து வந்த இனக் கலவரம் பற்றிய பின்னணியை அவை உறுப்பினர்கள் அறிவார்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தக் கலவரம் கடுமையான பரிமானங்களை ஏற்படுத்தி இலங்கையின் ஸ்திரத் தன்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டிற்கு அபாயம் ஏற்படுத்தி வந்தது.

1983-ம் ஆண்டில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக வன்முறை நிகழ்த்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட பெருமளவு உயிர்ப்பலி, கடுமையான இன்னல்கள் ஆகியவை பற்றிய விவரங்களை விரிவாக சொல்ல நான் விரும்பவில்லை. 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 1987-ம் ஆண்டு மே மாதம் வரையிலான காலம் இலங்கை வரலாற்றின் சோக அத்தியாயமாகும். தமிழர், சிங்களவர், பெண்டிர் மற்றும் குழந்தைகள், சாதுக்கள், துறவிகள் அடங்கிய ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடு இழந்து அகதிகளானார்கள். ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் இலங்கைத் தமிழ் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர்.

இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஸ்திரத் தன்மை ஆகியவற்றில் பாரதம் ஆழ்ந்த ஆர்வம் கொண்டு இருக்கிறது. இலங்கைப் போராட்டத்தில் நம் நாடு முழுவதும் கவலை கொண்டு



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. இந்த நெருக்கடிக்கு சரியான தீர்வு காண உதவுமாறு அதிபர் திரு. ஜெயவர்த்தன கேட்டுக் கொண்டார். நாம் உதவுவதாக ஒத்துக் கொண்டோம். இலங்கை தமிழ் குடிமக்களின் இன்னல்களை போக்கினால் இலங்கை தனது ஒற்றுமை, ஒருமைப்பாடு, பன்மொழி, பல மதம் ஆகிய அம்சங்களை பாதுகாக்கும் என்ற எண்ணத்தில் நம் முயற்சிகள் அமைந்திருந்தன. நான்கு ஆண்டுகளாக நிகழ்ந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக கொழும்பில் நேற்று உடன்பாடு ஒன்று கையெழுத்து ஆகியது. நம்முடைய பரஸ்பர கவலைகளை தெரிவித்துக் கொள்ளவும் இருதரப்பு நட்புறவுகளை பலப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை ஒத்துக் கொள்ளவும் கடித பரிமாற்றங்களை நானும் அதிபர் ஜெயவர்த்தனவும் செய்து கொண்டோம்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வு காணும் வகையில் வடிவமைப்பு ஒன்றை நாங்கள் ஏற்படுத்தினோம். தனிச் சிறப்பு மிக்க இனப் பிரிவாய் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற தமிழர்களின் போராட்டத்தின் அடிப்படை ஆவலை நிறைவேற்றுவது; அவர்களின் அரசியல் எதிர் காலத்தை நிர்வகிக்கும் வகையில் அரசியல் சுய ஆட்சி; இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவையான அரசு சக்தி, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை தமிழர்களின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த இடமாக அறிவித்தல், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில், தமிழை ஒரு ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒப்பந்தம் இதுவாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் ஒன்றுடனும் முதல்வர் ஒருவருடனும் கூடிய ஒரு நிர்வாகப் பிரிவாக இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளை ஆக்குதல் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள அம்சமாகும். 1986-ம் ஆண்டு மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இறுதியாக்கப்பட்ட தீர்மானங்களின் வடிவமைப்புக்குள் மாகாண கவுன்சிலுக்கு அரசு அதிகாரங்கள் பகிர்வு செய்து சுய ஆட்சிக்குத் தேவையான முழு நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் அம்சங்கள் ஆகும்.

விரைவில் இலங்கையில் நெருக்கடி நிலை நீக்கப்படும். சண்டை நிறுத்தப்படும். குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் ஆயுதங்கள் ஒப்படைக்கப்படும். எல்லாப் போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். மாகாண கவுன்சில்களுக்கு மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படும். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது பற்றி 1988-ம் ஆண்டு இறுதிக்குள் கருத்து அறியும் வாக்கெடுப்பு நடத்த உடன்பாடு வகை செய்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த கருத்து அறியும் வாக்கெடுப்பை ஒத்தி வைக்க இலங்கை அதிபருக்கு அதிகாரம் உண்டு.

இலங்கை அதிபரும் நானும் கடிதங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டோம். இந்தியாவின் அரசியல் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகளுக்கு ஒத்த முறையில் நடந்து கொள்ள இலங்கை ஒப்புக்கொண்டுள்ளது. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, ஒற்றுமை, ஸ்திரத்தன்மை ஆகியவற்றிற்கு வகை செய்ய இந்தியா ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்களை இந்தக் கடிதங்களும் உடன்பாடும் குறிப்பிடுகின்றன. இந்தியா இந்தப் பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றும்.

சென்ற சில நாட்களாக இலங்கையில் நடைபெறும் வன்முறை சம்பவங்களுக்கு ஜே. வி. பி. எனப்படும் ஜனதா விமுக்தி பெரமுன பொறுப்பாகும் என்று ஜெயவர்த்தனா என்னிடம் கூறினார். மத அமைப்புக்களைச் சேர்ந்த சிலரும் எதிர்க்கட்சியினரும் ஜே.வி பி.-யின் கருவியாக தங்களை அனுமதித்துக் கொண்டனர். ஆனால் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இந்த வன்முறையை ஆதரிக்கவில்லை.

1971-ல் ஜனதா விமுக்தி பெரமுன என்ற இந்த அமைப்பு தான் பெருமளவில் நாச வேலையில் ஈடுபட்டது என்பதையும் அதை ஒடுக்க நம் உதவியை அப்போதைய இலங்கை பிரதமர்

அதிபர் ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும், பிரதமர் ராஜீவ் காந்தியும் கொழும்பில் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

திருமதி பண்டாரநாயகா நாடினுர் என்பதும் நாம் உடனடியாக உதவி அளித்தோம் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும்.

இத்தகைய தொந்திரவுகளாலும் அதிகரித்து வரும் தேவைகளாலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமல்படுத்த தன்னுடைய அரசு நம் உதவியை கோருமென்று அதிபர் ஜெயவர்த்தன விவரித்தார். அதனுல்தான் இலங்கை அரசு, சண்டையை நிறுத்துவதற்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கும் இந்திய ராணுவ உதவியை கோரியது. யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கில் சில இடங்களுக்கு இடம் பெயர விமானப் போக்குவரத்தையும் திரு. ஜெயவர்த்தன கோரினுர்.

இலங்கை அரசின் முறையான வேண்டுகோளின் அடிப்படையிலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படியும் இந்தியப் படைகள் இலங்கையில் நேற்று இறங்கியிருக்கின்றன. இலங்கை அரசின் முறையான கோரிக்கையின்பேரிலும் இந்திய இலங்கை உடன்பாட்டின்படியும்தான் இலங்கையில் இந்தியப் படைகள் இறங்கியுள்ளன என்பதை மீண்டும் திருப்பிச் சொல்கிறேன். இலங்கையின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உதவும் வகையிலும் உடன்பாட்டை செயல்படுத்தும் வகையிலும் இலங்கை இனக்கலவரத்தை நிறுத்தும் வகையிலும் நம் இந்தியப் படைகள் இலங்கைக்கு சென்றுள்ளன. பல்வேறு மட்டங்களில் இலங்கை அரசுடன் தொடர்ந்து நாம் தொடர்பு கொண்டு வருகிரேம்.

இலங்கை அரசுக்கும் இலங்கை அதிபருக்கும் இந்த உடன்பாட்டை எட்டுவது அவ்வளவு சுலபமானதாக அமையவில்லை. மீண்டும் ஒரு முறை அதிபர் ஜெயவர்த்தனுவின் அறிவுக் கூர்மை, தைரியம், ராஜதந்திரம் ஆகியவற்றிற்கு நான் மரியாதை செலுத்துகிறேன்.

இலங்கையின் அண்மைக் கால வரலாற்றில் இடம் பெற்ற சோக அத்தியாயத்திற்கு முடிவு காணவும் இந்திய-இலங்கை நட்புறவின் புதிய அத்தியாயத்திற்கு துவக்கமாகவும் இந்த ஒப்பந்தம் அமையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதேபோலவே இந்த உடன்பாடு கடந்த காலத்தில் நிலவிய பதட்ட நிலைகளையும் அவநம்பிக்கைகளையும் போக்கி உறவுகளை வலிமைப்படுத்தும் என்றும் உறுதியாக நான் நம்புகிறேன். 2500 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வந்த வரலாறு மற்றும் பாரம்பரியப் பங்கு தொடர்ந்து வலிமை பெறும்.

மேதகு அதிபர் ஜெயவர்த்தனுவும் நானும் கையொப்பமிட்ட ஒப்பந்த நகலையும் கடித பரிமாற்ற நகலையும் இந்த அவையின் முன் வைக்கிறேன்.

இதே போன்ரெரு அறிவிப்பு லோக் சபாவில் செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் அமைதி மற்றும் சுமுக நிலையை ஏற்படுத்தும் இந்திய இலங்கை ஒப்பந்தம்

இந்திய குடியரசின் பிரதமர் மேதகு திரு. ராஜிவ் காந்தியும், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிபர் மேதகு திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி கொழும்பு நகரில்சந்தித்துக் கொண்டனர். இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வரும் தொன்று தொட்ட நட்புறவை பலப்படுத்தவும், அதனை வளர்த்து பராமரிக்கும் உயர்மிகு முக்கியத்துவத்தை இணைத்து, இலங்கையின் இனப் பிரச்னையை தீர்க்கும் உடனடித் தேவையை ஏற்று, இலங்கையில் வசிக்கும் அனைத்து இன மக்களின் பாதுகாப்பு, வளமை, மேம்பாடு ஆகியவற்றுக்காகவும் வன்முறையை தவிர்ப்பதற்காகவும்

இந்த இலக்கினை நிறைவேற்றும் முகத்தான் கீழ்க்கண்ட ஒப்பந்தம் இந்த நாளில் கையெழுத்திடப்படுகிறது.

இதன் தொடர்பாக,

1.1 இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை பராமரிப்பதில் ஆர்வம் கொண்டு,

1.2 இலங்கை பல இன, பல மொழி பேசும் மக்களை அதாவது சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் (மூர்ஸ்), பர்ஹர்கள் ஆகியோரைக் கொண்டது என்பதையும் அங்கீகரித்து,

1.3 ஒவ்வொரு இனமும் தனி கலாச்சார, மொழியைக் கொண்டது, அவற்றை வளர்ப்பது அவசியம் என்பதை ஏற்று,

1.4 இலங்கைத் தமிழர்களின் சரித்திரபூர்வமான வசிப்பிடமாக வடக்கு—கிழக்கு மாகாணங்கள் இருந்து வந்திருக்கிறது. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் அங்கீகரித்து,

1.5 இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றை பலப்படுத்துவதின் அவசியத்தை உணர்ந்து, இலங்கையின் பல இன, பல மொழி, மதங்கள் கொண்ட சமூகத்தின் தன்மையை பாதுகாப்பதின் தேவையையும் உணர்ந்து அதன் அனைத்து குடிமக்களும் உரிமைகளுடனும், மகிழ்ச்சியோடும் வாழ கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்படுகிறது.

2. தீர்மானிக்கும்பொருட்டு

2.1 கீழ்க்கண்டவாறு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாக இணையவும், அவைகளை பொது மக்கள் வாக்கெடுப்பு மூலம் தனியாகப் பிரிக்கவும், அனுமதிக்க இலங்கை அரசு தீர்மானிக்கிறது.

2.2 மாகாண கவுன்சிலுக்கான தேர்தல் தேதி பத்தி 2.8-ல் குறிப்பிட்டுள்ளபடியும் பொது மக்கள் வாக்கெடுப்பு தேதி பத்தி

படிப்பகம்

www.padippakam.com

2.3-ல் குறிப்பிட்டுள்ளபடியும் நிர்வாகப் பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணக் கவுன்சிலுடன் இயங்கும். இந்த ஒரே நிர்வாகப் பகுதிக்கு ஒரு கவர்னர், ஒரு முதல்வர், ஒரு அமைச்சரவையும் இருக்கும்.

2.3 1988-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதியோ அதற்கு முன்னரோ ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பு,

அ. வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒரே நிர்வாகப் பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து 2.2-ல் கண்டுள்ளபடி ஆளப்படுவதா அல்லது

ஆ. தனி நிர்வாகப் பகுதியாக தனக்கென தனி மாகாணக் கவுன்சில், தனி கவர்னர், தனி முதல்வர், தனி அமைச்சரவையுடன் இயங்குவதா என்பதைத் தீர்மானிக்கும்.

இலங்கை ஜனாதிபதி அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பை தனது விருப்பப்படி ஒத்தி வைக்கவும் உரிமை உண்டு.

2.4 இன வன்முறை அல்லது மற்ற காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்தவர்களும் அத்தகைய பொதுமக்கள் வாக்களிப்பில் வாக்களிக்க உரிமை உண்டு. அவர்கள் எந்த இடத்திலிருந்து வெளியேறினார்களோ அந்த இடங்களுக்கு திரும்ப தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

2.5 அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெறும் பொழுது, இலங்கை தலைமை நீதிபதி தலைமையில் இலங்கை அரசால் குறிப்பிடப்பட்டு, இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர், கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதிகளால் குறிப்பிடப்பட்டு, ஜனாதிபதியாய் நியமிக்கப்படும் ஒருவர் இடம் பெறும் கமிட்டியால் கண்காணிக்கப்படும்.

2.6 பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் அமையும்.

2.7 பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கை சட்டங்கள் அனுமதிக்கும் பிரச்சார முறைகளுக்கு உரிமை உண்டு.

2.8 மாகாண கவுன்சில்களுக்கான தேர்தல் அடுத்த 3 மாதங்களுக்குள் 1987 டிசம்பர் 31-ந் தேதிக்கு முன்னதாக நடைபெறும். வடக்கு, கிழக்கு மாகாண தேர்தல்களின்போது இந்தியப் பார்வையாளர்கள் வரவேற்கப்படுவார்கள்.

2.9 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந் தேதிவாக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசர நிலை நீக்கப்படும். இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் அமலுக்கு வரும். போராளிகள் தங்களது ஆயுதங்களை இலங்கை அரசு குறிப்பிடும் அதிகாரிகளும், ஒத்துக்கொள்ளப்பட்ட நடைமுறைப்படி ஒப்படைப்பார்கள். போர் நிறுத்தம் ஆயுத ஒப்படைப்பு ஆகியவைகளின் உடன் விளைவாக இலங்கை ராணுவமும் மற்ற பாதுகாப்புப் படைகளும் 1987-ம் ஆண்டு மே மாதம் 25-ந் தேதி நிலவரப்படி முகாம்களுக்கு திரும்புவார்கள். ஆயுத ஒப்படைப்பு, இலங்கை பாதுகாப்புப் படைகள் முகாம்களுக்கு


படிப்பகம்

www.padippakam.com

திரும்புவது போர் நிறுத்தம் ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குள் நடைபெறும்.

2.10 வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சட்ட அமல், பாது காப்பு பராமரிப்பு பணிகளுக்காக நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ளது போன்ற அமைப்புக்கள் பயன்படுத்தப்படும்.

2.11 எல்லா அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாதச் சட்டம், மற்ற அவசர நிலைச் சட்டங்களின் கீழ் சிறையில் உள்ள, வழக்கு விசாரணையில் உள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப் படும். தேசிய வாழ்க்கை நீரோட்டத்திற்கு இளைஞர்களான போரா ளிகளைக் கொண்டுவர விசேஷ முயற்சிகளை இலங்கை அரசு மேற் கொள்ளும். இந்த முயற்சிகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு தரும்.

2.12 மேலே கண்ட ஷரத்துக்கள் அனைத்தையும் இலங்கை அரசு ஏற்று அமல் செய்யும். மற்றவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.



ஒப்பந்தப் பத்திரப் பரிமாற்றம்

2.13 இந்த தீர்மானங்களுக்கான நடைமுறை ஏற்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட திட்டங்களை இலங்கை அரசு உடனடி யாக அமல் செய்யும்.

2.14 இந்த தீர்மானங்களுக்கு இந்திய அரசு உத்தரவாதம் அளிக்கும். இந்த திட்டங்களை அமல்படுத்துவதில் ஒத்துழைக்கும்.

2.15 இந்த திட்டங்கள் 4.5.1986-ம் தேதிக்கும் 19.12.1986-ம் தேதிக்கும் இடைக் காலத்தில் விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பதை நிபந்தனையாக கொண்டுள்ளன. மேற்கண்ட காலத்தில் இறுதியாக்கப்படாத விபரங்கள் இந்த ஒப்பந்தம்



படிப்பகம்

www.padippakam.com

கையெழுத்திடப்படும் தேதியிலிருந்து ஆறு வார காலத்திற்குள் இந்திய-இலங்கை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப் படும். மேலும் இலங்கை அரசோடு, இந்திய அரசு நேரடியாக இந்த திட்டங்களை அமல் செய்ய ஒத்துழைப்பதையும் நிபந்தனை களாகக் கொண்டுள்ளன.

2.16 மேலும் இந்த ஒப்பந்தத் திட்டங்களை இலங்கையில் செயல்படும் எந்த ஒரு போராளிகளின் குழுவாவது ஏற்றுக் கொள்ளாதபட்சத்தில் இந்திய அரசு மேற்கொள்ளும் நட வடிக்கைகளையும் இந்த திட்டங்கள் நிபந்தனைகளாக கொண் டுள்ளன. இதன்படி,

அ) இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு இந்தியப் பகுதி பயன்படாமல் பார்த் துக்கொள்ள இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்.

ஆ) இலங்கை கடற்படையுடன், தமிழ்ப் போராளிகளின் நட வடிக்கைகளைத் தடுக்க இந்திய கடற்படை, கடலோர காவல் படை ஒத்துழைப்பு தரும்.

இ) இந்த திட்டங்களை அமல் செய்ய ராணுவ உதவி வழங்கும் படி இலங்கை அரசு கோரினால், கோரிய உதவியை கோரிய சமயத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

ஈ) இலங்கையில் உள்ள இந்தியக் குடிமக்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு துரிதப்படுத்தும். உடன் விளைவாக தமிழ் நாட்டில் இருந்து தமிழ் அகதிகள் இலங்கை திரும்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உ) வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனத் தவரின் உயிருக்கும் உடலுக்கும் ஊறு ஏற்படாமல் பாது காப்பை உறுதி செய்ய இந்திய-இலங்கை அரசுகள் ஒத்து ழைக்கும்.

2.17 இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாண தேர்தல்களில் அனைத்து இனத்தவரும் சுதந்திரமாக, முழுமை யாக, நேர்மையாக பங்கு பெறுவதை இலங்கை அரசு உறுதி செய்யும். இதன் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்பு தரும்.

2.18 இலங்கையின் அரசு அலுவல் மொழியாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலியன இருக்கும்.

3. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும் அமலுக்கு வரும்.

அதிகாரப்பூர்வமான அசல் நகல் உள்ளிட்ட இரண்டு பிர தானப் பகுதிகளையும் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் நாள் அன்று இலங்கை கொழும்பில் நம் இருவரின் சாட்சிப்படி இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடுகிறோம்.

| | |
|---|---|
| *ராஜீவ் காந்தி* | *ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தன* |
| இந்திய குடியரசின் பிரதமர் | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அதிபர் |

படிப்பகம்

www.padippakam.com

# ஒப்பந்த இணைப்பு

1. மேதகு இந்தியப் பிரதமரும் மேதகு இலங்கை அதிபரும் உடன்பாட்டின் இரண்டாவது பத்தி மற்றும் அதன் துணை பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை கவனிக்க, இந்திய தேர்தல் கமிஷனின் பிரதிநிதி ஒருவரை மேதகு இலங்கை அதிபர் அழைப்பார் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

2. அதேபோல் இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்பந்தத்தின் பத்தி 2.8-ல் குறிப்பிட்டுள்ள பிராந்திய கவுன்சிலின் தேர்தல்களின்போது அதனை மேற்பார்வையிட இந்திய அரசின் பிரதிநிதி ஒருவரை இலங்கை அதிபர் அழைக்கவும் ஏற்றுக் கொண்டனர்.

3. ஊர்க்காவல் படையினரும் துணை ராணுவப் படையினரும் கிழக்கு மற்றும் வடக்கு பிராந்தியங்களில் இருந்து திருப்பி அழைக்கப்படவும், கவுன்சிலுக்காக தேர்தல்களை நல்ல முறையில் நடத்த நிலைமைகளை உருவாக்கும் வகையில் செயல்பட இலங்கையின் மேதகு அதிபர் ஏற்றுக் கொள்கிறார்.

   இன வன்முறையின்போது கொண்டு நிறுத்தப்பட்ட துணை ராணுவ துருப்புக்களை இலங்கையின் நிரந்தரப் பாதுகாப்பு படையாக ஏற்றுக்கொள்வது அதிபரின் · அதிகாரத்திற்கு உரியது.

4. தமிழ் போராளிகள் தங்கள் வசமுள்ள ஆயுதங்களை ஒப்படைப்பார்கள் என்பதை இந்திய பிரதமரும் இலங்கை அதிபரும் ஏற்றுக் கொள்கின்றனர். இலங்கை செஞ்சிலுவை சங்கம், இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகிய இரு அமைப்புகளின் மூத்த பிரதிநிதி ஒருவரின் முன் இந்த ஆயுத ஒப்படைப்பு நடைபெறும்.

5. இந்திய அரசு மற்றும் இலங்கை அரசைச் சேர்ந்த தகுதி வாய்ந்த பிரதிநிதிகள் அடங்கிய இந்திய இலங்கை கூட்டு கண்காணிப்பு குழு ஒன்று 1987 ஜூலை மாதம் 31-ம் தேதி முதல் சண்டையை நிறுத்துவது என்பதை கவனிக்கவும் இந்திய பிரதமரும் இலங்கை அதிபரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

6. ஒப்பந்தத்தில் பத்தி எண் 2.14, 2.16(சி)-யில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி சண்டையை நிறுத்தும் நடவடிக்கையை உறுதிப்படுத்த, இந்திய அமைதி பராமரிப்பு படை ஒன்றை, தேவைப்பட்டால், இலங்கை அதிபர் அழைக்கக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிபர் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்திய குடியரசின் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதம்

மேன்மைதாங்கியவருக்கு,

தங்களின் 29.7.1987 நாளிட்ட கடிதத்தை தங்களின் பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

மேன்மைதாங்கியவருக்கு,

நம் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை நெஞ்சில் நிறுத்தி, இரண்டு மில்லியன் அல்லது அதற்கு மேலான ஆண்டுகளாக பின்னிப் பிணைந்த நட்புறவை, அத்தகைய முறையில் தொன்று தொட்டு நிலவி வரும் நம் நட்பின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுகிறபோது இலங்கையும் இந்தியாவும், ஒரு நாடு மற்ற நாட்டின் ஒற்றுமை, எல்லை ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை பாதகமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் உறுதியான முறையில் நம் இரு நாடுகளின் நட்பை பலப்படுத்தி வருகிறோம்.

2. இதே உணர்வோடு, நம்முடைய விவாதங்களின்போது இந்தியாவை கவலைக்குள்ளாக்கும் கீழ்க்கண்ட அம்சங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள்.

   1. மேன்மைதாங்கிய நீங்களும் நானும், வெளிநாட்டு ராணுவம் மற்றும் உளவாளிகள் ஆகியோரை தவிர்த்தலின் மூலம் இந்திய இலங்கை நட்புறவை விரிசலுக்கு வழி வகுக்காமல் இருக்கும் வகையில் பரஸ்பரம் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விரைவில் அடைவது.

   2. திரிகோணமலை அல்லது இலங்கையின் மற்ற துறைமுகங்களும், எந்த நாட்டின் ராணுவ பயன்பாட்டிற்கும் பயன்படுத்தாவண்ணம், இந்தியாவின் ஆர்வத்தை அதன் போக்கிலேயே பராமரிப்பது.

   3. திரிகோணமலை எண்ணெ கிடங்கு பண்ணையை மீட்டு இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையே கூட்டு முயற்சியில் செயல்படுத்தத் துவங்குதல்.

படிப்பகம்

www.padippakam.com

4. வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புகளுடன் இலங்கை அரசு மேற்கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புகள் இலங்கையில் நிறுவிய வசதிகள் யாவும் பொதுமக்களுக்கு மட்டுமே பயன்படக் கூடிய ஒலிபரப்பு வசதிகளை கொண்டதாக மட்டும் அமையுமாறு பரிசீலனை செய்யப்படும். ராணுவ மற்றும் உளவு நடவடிக்கைகளுக்கு ஒலிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படமாட்டாது.

3. இதே உணர்வில், இந்தியாவும்

1. தீவிரவாத நடவடிக்கைகள், பிரிவினைவாதத்தை ஊக்குவித்தல் போன்ற ~~தொடர்புகளை அரசியல் நீக்குதல் ஆகிய~~ செயல்களில் ஈடுபடும் இலங்கை குடிமக்களை நாடுகடத்துதல்.

2. இலங்கை பாதுகாப்பு படைகளுக்கு பயிற்சி வசதிகள் மற்றும் ராணுவ விநியோகம் ஆகியவற்றை நல்குதல்.

4. பத்தி ஒன்றில் குறிப்பிட்ட ஷரத்துக்களில் நிலவுகிற இரு நாடுகளுக்கும் பொதுவாக கவலைத் தரக்கூடிய பிரச்னைகளை தொடர்ந்து மதிப்பீடு செய்யும் வகையில் கூட்டு ஆலோசனை அமைப்பு ஒன்றை நிறுவ இந்தியாவும் இலங்கையும் ஒத்துக் கொண்டன. மேலும் குறிப்பாக இந்தக் கடிதத்தில் குறிப் பிட்டுள்ள மற்ற விஷயங்கள் செயலாக்கப்படுவதை கவனித் தல்.

5. நம் இருவருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் மேற் கண்டவை பொருத்தமாகிறதா என்பதை, மேன்மை தாங்கியவரே தயவு செய்து உறுதிப்படுத்துங்கள்.

என்னுடைய தீர்மானமான உறுதிப்பாடுகளை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

தங்களின் உண்மையுள்ள,
ஒப்பம்
(ராஜீவ் காந்தி)

மேதகு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன,
இலங்கை குடியரசின் அதிபர்,
கொழும்பு.

நம் இருவருக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை புரிந்து கொள்ளும் வகையில் மேற்கண்டவை பொருந்துகின்றன என் பதை இது உறுதிப்படுத்துகிறது.

என்னுடைய தீர்மானமான உறுதிப்பாடுகளை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒப்பம்
(ஜே. ஆர். ஜெயவர்த்தன)

மேதகு திரு. ராஜீவ் காந்தி,
இந்திய குடியரசின் பிரதமர்,
புது தில்லி.


படிப்பகம்

www.padippakam.com


# ஒப்பந்த அமலாக்கம்

இலங்கையில் அமைதியையும், இயல்பான நிலைமையையும் நிலைநிறுத்த ஜூலை 29-ம் தேதியன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்றில், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவுடன் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பில் கையெழுத்திட்டார். கொழும்பிலிருந்து திரும்பியவுடன் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் பிரதமர் அறிக்கை வெளியிட்டார். அத்துடன் ஒப்பந்த வாசகம் இரண்டு அவைகளிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

2. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்த ஒப்பந்தம் வரவேற்கப்பட்டுள்ளது. நமது பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், அதிபர் ஜெயவர்த்தனவும் காட்டியுள்ள அரசியல் திறனையும், அறிவுத் திறனையும், தீரத்தையும் உலகத் தலைவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர்.

3. இந்த ஒப்பந்த அமலாக்கத்தை உறுதிப்படுத்த, இலங்கை அரசு இந்திய அரசிடம் ராணுவ உதவி கேட்பதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. ஜூலை 31-ம் தேதி பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்த வண்ணம், ஜூலை 29-ல் ஒப்பந்தம் கையெழுத்தானவுடனேயே, இத்தகைய உதவியை இலங்கை அரசு முறையாகக் கேட்டது. ஒப்பந்த உதவியை நிறைவேற்றும் வகையில், அமைதி பாதுகாப்பு பணிகளை ஏற்றுக் கொள்ளவும், ஒப்பந்த அமலாக்கத்திற்கு உதவவும் ஜூலை 30-ம் தேதியன்று இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் இறங்கின.

ஆயுதங்கள் ஒப்படைப்பு



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கத்தின் பிரதிநிதியிடம் இலங்கையின் பாதுகாப்பு செயலர் பொது மன்னிப்பு அறிக்கையினை சமர்ப்பித்தார்.

4. இந்திய படைகள் இறங்கியதும், போராளிகளுக்கும் இலங்கை அரசுப் படையினருக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. எந்த வன்முறைச் சம்பவமும் இன்றி போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதியும், சமாதானமும் திரும்பியது. வீடிழந்து தங்கள் வசிப்பிடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பெரும்பாலானோர் தங்கள் இல்லங்களுக்கு திரும்பத் தொடங்கி விட்டனர்.

5. அடுத்த, இன்னும் சொல்லப்போனால் மிக முக்கியமான நடவடிக்கையாக அமைந்தது, போராளிக் குழுக்களை குறிப்பாக மிகப் பெரியதும், அதிகம் செயலாற்றும் குழுவான தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அமைதி ஒப்பந்தத்தை ஏற்க செய்து, படைக்கலன்களை ஒப்படைக்கச் செய்வதாகும். பல ஆண்டு கால இனச் சிக்கல் காயங்களை ஆற்றுவதற்கும், இணக்கச் சூழல் உருவாக்குவதற்கும் முன் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான முதல் பெரும் நடவடிக்கையாக அது அமைந்தது.

6. ஆகஸ்ட் 3-ம் தேதி பிற்பகலுடன் 72 மணி நேர [illegible] முடிவடைந்து முன், படைக்கலன்களை தாங்கள் [illegible] ஆகஸ்ட் 4-ம் தேதியன்று [illegible] பொதுக் கூட்டமொன்றில் முறைப்படி அறிவிப்பு [illegible] ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய அரசிடம் [illegible] இலங்கை அதிபரால் நியமிக்கப்பட்ட [illegible] படைக்கலன்கள் ஒப்படைக்கப்பட்ட [illegible] ஆகஸ்ட் [illegible] தேதியன்று இலங்கை பாதுகாப்பு [illegible] இந்திய [illegible] போராளிகள் [illegible]

படிப்பகம்

www.padippakam.com

படைக்கலன்களை பெறுவதற்கான அதிகாரிகளாக அதிபர் ஜெயவர்த்தன நியமித்தார். அன்று பிற்பகலிலேயே முறைப்படி படைக்கலன்களை ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பல்வேறு சேகரிப்பு மையங்களில் இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் படைக்கலன்கள் இப்போது ஒப்படைக்கப்படுகின்றன. விரைவில் இந்த ஒப்படைப்பு பணி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. இணக்கச்சூழல் ஏற்படுத்துவதில் மேலும் ஒரு நடவடிக்கையாக, படைக்கலன்களை ஒப்படைக்கும் போராளிகளுக்கு பொது மன்னிப்பை வழங்குவதாக அதிபர் ஜெயவர்த்தன அறிவித்தார். சிறை வைக்கப்பட்டோரும், இலங்கை அரசின் குறிப்பிட்ட சட்டத்தின்படி போராளி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டோரும் பொது மன்னிப்பு பெற இயலும். ஆயிரம் அரசியல் கைதிகள் கொண்ட முதல் அணியை விடுதலை செய்வதற்கான ஆணை ஏற்கனவே கையெழுத்தாகி உள்ளது. அவர்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல உதவுமாறும் இலங்கை இந்தியாவை கேட்டுக் கொண்டது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் தமது முடிவை அதிபர் ஜெயவர்த்தன ஆகஸ்ட் 6-ந் தேதியன்று அறிவித்தார். அமைதி பாதுகாப்பு பணிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைக்கலன்கள் ஒப்படைக்கப்படுவதை உறுதிப்படுத்திடவும் உதவுமாறு இலங்கை அரசு இந்தியப் படையினரை கேட்டுக்கொண்டது.

8. பலர் எதிர்பார்த்ததை விட, குறிப்பிடத்தக்க வகையில், மிகச் சிறப்பாக, ஒப்பந்த அமலாக்கம் நடைபெறுகிறது. பொறுமை, தொடர்ந்த ராஜ்யத்துறை முயற்சிகள், அமலாக்க நடவடிக்கைகளில் துல்லியமான கண்காணிப்பு ஆகியவற்றால் இது சாத்தியமாயிற்று.

9. இலங்கை நாட்டவரில் சிங்களவர்களிலும், தமிழர்களிலும் மிகப் பெரும்பான்மையானவர்கள், தங்கள் நாட்டில் அமைதி ஒற்றுமை ஏற்படுவதையே விரும்பினர். பல ஆண்டு கால இனப் போருக்குப் பின் அமைதியும், பாதுகாப்பும் உருவாகும் வாய்ப்பினைக் கண்டு இலங்கையின் எல்லாப் பிரிவிலும் உள்ள மிகப் பெரும்பான்மையானோர் மகிழ்ச்சியும், மிகுந்த நிம்மதியும் பெற்றுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒப்பந்தம் குறித்து உலகத் தலைவர்களின் கண்ணோட்டம்

அதிபர் ஜெயவர்த்தனவுடன் வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் கையெழுத்திட்டது குறித்தும், பேச்சுவார்த்தை மூலம் வெற்றிகரமான முடிவிற்கு கொண்டு வந்த உங்களது தீரத்தையும் நான் மனமார பாராட்டுகின்றேன். இந்தியா தொடர்ந்து நிகழ்த்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் அமைதியான தீர்வுக்கு வழிகோல ஒப்பந்தம் வகை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

—பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கரேட் தாட்சர்
(பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு எழுதிய
கடிதத்திலிருந்து...)
30.7.87

இலங்கை பிரச்னைக்கு தீர்வு காண அதிபர் ஜெயவர்த்தனவுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திற்காக நான் உங்களை பாராட்டுகிறேன். சமீப ஆண்டுகளாக இலங்கையை ஆக்கிரமித்து வரும் வன்முறை மற்றும் துன்பங்களுக்கும் இந்த ஒப்பந்தம் ஒரு முடிவு காணும் என்று நான் நம்புகிறேன். வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தத்தை நிறைவேற்றிய உங்களது அரசியல் திறனை என்னைப் போலவே கனடா நாட்டு குடிமக்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

—பெரைன் முல்ரோனி (கனடாவின் பிரதம மந்திரி
பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய
கடிதத்திலிருந்து...)
6.8.87

நீங்களும் இந்திய குடியரசின் பிரதமர் மேதகு திரு ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்ட ஒப்பந்தம், உங்கள் பிராந்தியத்தில் அமைதி நிலவ வகை செய்யும். எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிக்க, இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம், இப்பிராந்திய மக்களிடையே அமைதி, ஒருமைப்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றை உயர்த்த, மற்றொரு நடவடிக்கையாக ஒப்பந்தம் அமையும் என நான் நம்புகிறேன்.

—(அதிபர் ஜெயவர்த்தனவிற்கு அல்ஜீரிய அதிபர்
ஷாட்லி பென்ஜீதித் அவர்களின் செய்தி...)
10.8.87

அமைதி மற்றும் சுமுக நிலையை மீண்டும் கொண்டு வருவதே ஒப்பந்தத்தின் நோக்கம் என ஐ.நா. பொதுச் செயலர் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

—(ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிநிதி)
31.7.87

இந்திய மற்றும் இலங்கை அரசின் அரசியல் தீரத்தை ஒப்பந்தம் எடுத்துக்காட்டியுள்ளது.

—பில்ஹெடன் (ஆஸ்திரேலியாவின் வெளிவிவகார
மற்றும் வர்த்தக அமைச்சர் பத்திரிகை குறிப்பு
31.7.87 அன்று வெளியிடப்பட்டது.)

படிப்பகம்

www.padippakam.com

ஒப்பந்தத்தின் குறிக்கோள்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும், இந்திய—இலங்கை நாடுகளுக்கிடையே நல்லுறவு வலுப்படுவதற்கும், அமைதி, ஒருமைப்பாடு, மற்றும் பிராந்தியங்களிலுள்ள நாடுகளுக்கிடையே உறவு வலுப்படுவதற்கும் ஒப்பந்தம் வகை செய்யும் என்று நேபாள அரசு நம்பிக்கைக் கொண்டுள்ளது.

—(நேபாள வெளிநாட்டு அமைச்சகத்தின் பிரதிநிதி)
4.8.87

# உலக பத்திரிக்கைகள்

## ஆசிய நாளேடுகள் பாராட்டு

...இரு தலைவர்களது அரசியல் திறனின் அளவுகோல்

—நியு நேஷன் (பங்களாதேஷ்)
31.7.87

அதிபர் ஜெயவர்த்தனாவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்ட, அமைதி ஒப்பந்தம் உலகத்தையே மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அதிபர் ஜெயவர்த்தனாவின் அரசியல் திறன் ஒரு தீரமான செயல்.

—நேபாளி (நேபால்)
2.8.87

...படுகொலை மற்றும் அழிவு சம்பவங்கள் நடைபெற்ற சமயத்தில், இலங்கைத் தீவில் அக்கறை கொண்டுள்ள அனைவரும், ஒப்பந்தம் வெற்றிகரமாக அமல் செய்யப்படுவதை விரும்புவர்.

—வியூ பாயிண்ட் (பாகிஸ்தான்)
6.8.87

பல பார்வையாளர்களிடையே நம்பிக்கையின்மையின் சாயல் இருந்த போதிலும், அமைதிக்கு வழி வகுக்க இந்த ஒப்பந்தம் நிச்சயம் வழிகோலும்.

—ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் (சிங்கப்பூர்)
31.7.87

"ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனாவும், இருள் பாதையின் இறுதியில் ஏற்றி வைத்த சிறிய தீபச் சுடரை தெளிவாக பார்க்கலாம். இருள் சூழ்ந்த இரவில், இந்த அமைதி மெழுகுவர்த்தி, பிரகாசமான ஒளியைத் தரும். நன்னம்பிக்கைக் கொண்ட எல்லா உலக மக்களையும் இறைவன் வாழ்த்தட்டும்..."

—இந்தோனேஷியன் அப்சர்வர் (இந்தோனேஷியா)
7.8.87

...இவ்வாறும் மகிழ்ச்சி மேம்பாடு கொண்ட நிகழ்ச்சியாக இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் ஜூனியஸ் ஜெயவர்த்தனாவும் கையெழுத்திட்ட ஒப்பந்தம், 6000 உயிர்களை பலி கொண்ட நான்கு ஆண்டு கால இனக்கலவரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

—[illegible]
1.8.87



படிப்பகம்

www.padippakam.com

இரு தலைவர்கள் கையெழுத்திட்ட அமைதி ஒப்பந்தம், இனக்கலவரம் மற்றும் பிராந்திய கலவரம் விரைவில் முடிவதற்கு வகை செய்தது. இப்பிராந்தியங்களிலுள்ள நாடுகளின் குறுக்கீடு ஏதும் இல்லாமல், இரு நாட்டின் தலைவர்களது அரசியல் தலைமையில் சுமுக நிலை ஏற்பட்டது என்பதை உணரலாம்.

—மைனிசி சிம்பன் (ஜப்பான்)
31.7.87

நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வந்த வன்முறை மற்றும் இரத்தப் போராட்டங்களினால் 6000 உயிர்கள் பலியாயின. இந்திய—இலங்கை ஒப்பந்தம் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. போராட்டத்தின் இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டால், ஆயிரம் டாங்குகளைக் காட்டிலும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பது, சக்தி வாய்ந்த கருவியாக விளங்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

—ஜோர்டான் டைம்ஸ் (ஜோர்டான்)
3.8.87

…ஒப்பந்தம் ஒரு மகத்தான சாதனையை எட்டியது … அமைதி ஏற்பட வாய்ப்பொன்று ஏற்பட வேண்டும்.

—காலிஜ் டைம்ஸ் (அபுதாபி)
31.7.87

## வட ஆப்ரிக்க நாளேடுகள் பாராட்டு

ஏனைய இடங்களில் இனக் கலவரத்திற்கு தீர்வு காண்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

—எகிப்தியன் கெசட் (எகிப்த்)
1.8.87

## ஐரோப்ப நாளேடுகள் பாராட்டு

ஒப்பந்தம் திரு. ராஜீவ் காந்தியின் ராஜ்ய திறனை எடுத்துக் காட்டுகிறது… குறைபாடுகள், மற்றும் சச்சரவுக்குள்ளாதாக ஒப்பந்தம் இருந்த போதிலும் இலங்கையில் நெடுங்காலமாக நிலவி வந்த இரத்த இனப் போராட்டத்திற்கு முடிவு காண இந்த ஒப்பந்தம் வகை செய்துள்ளது.

—பைனான்சியல் டைம்ஸ் (பிரிட்டன்)
30.7.87

ஒப்பந்தத்தின் சிற்பிகளான அதிபர் ஜெயவர்த்தனாவும், இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் தங்களது சாதனை குறித்து பெருமிதம் கொள்ளலாம்.

—டைம்ஸ் (லண்டன், பிரிட்டன்)
10.8.87

இலங்கைப் பிரச்னைக்கு நேற்று வெளியான திரு. ராஜீவ் காந்தியின் அமைதிச் சீட்டு மகத்தான விளைவை ஏற்படுத்தும். இது பாராட்டுக்குரியது.

—கார்டியன் (பிரிட்டன்)
7.8.87



படிப்பகம்

www.padippakam.com

"தற்போதைய சூழ்நிலையில் அரசியல் நிகழ்வாக விளங்கும் இந்திய—இலங்கை ஒப்பந்தம் ராஜ்ய திறன் மிக்க வெற்றி "

—பொலிடிகா (யூகோஸ்லோவியா)
9.8.87

இலங்கை தீவில் புதிய சகாப்தத்தை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்துவதோடு, தமிழர் மற்றும் சிங்களவர்களுக்கிடையே கடந்த காலங்களில் இருந்து வந்த கசப்புணர்வை நீக்குவதாகவும் அமையும்... முக்கிய பிரச்னை சாதிக்கப்பட்டு விட்டது. இரு அண்டை நாடுகளுக்கிடையிலுமான உறுதியான நம்பிக்கை மீட்கப்பட்டு விட்டது.

—பராவட (ருஷ்யா)-வில் வெளியிடப்பட்ட கட்டுரையிலிருந்து...
5.8.87

பாரதத்தின் மிகப் பெரிய சாதனை இந்த ஒப்பந்தம்...

—நெப்சப்ட்சாக் (ஹங்கேரி)

## அமெரிக்க பத்திரிக்கைகள் பாராட்டு

காலத்தே மேற்கொள்ளப்பட்ட தலைமை பொருப்பு வாய்ந்த செயல் இது. இலங்கை விரும்பிய நிலையை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தும்.

—வாஷிங்டன் போஸ்ட் (அமெரிக்கா)
29.7.87

அரிவார்ந்த, நடுநிலை வழி கொண்ட இந்த ஒப்பந்தம் தமிழ்—சிங்கள சிறுபான்மையினரிடையே நட்புறவுக்கு வழி வகுக்கும்.

—ஒட்டாவா சிடிசன் (கனடா)
1.8.87

## பசுபிக் நாளேடு பாராட்டு

சரியான திசையில் எடுத்து வைக்கப்பட்ட பெரிய அடிச்சுவடு. இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனவும் இந்திய பிரதமர் திரு ராஜீவ் காந்தியும் எதிர்ப்புகளுக்கு இடையிலும் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியமைக்காக பாராட்டப்பட வேண்டியவர்கள்.

—'ஏஜ்' (ஆஸ்திரேலியா)
29.7.87

## இந்திய பத்திரிக்கைகள் பாராட்டு

இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்ட இலங்கை ஒப்பந்தம் துணைக் கண்டத்தில் பங்களாதேஷ் போருக்கு பிறகு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சியாகும்.

—நவ் பாரத் டைம்ஸ்
31.7.87



படிப்பகம்

www.padippakam.com

இரு நாடுகளிலும் அமைதி விரும்பும் மக்கள் (புதனன்று) பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனவும் கையொப்பமிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இரு தரப்பு உடன்படிக்கையை மனமாரப் பாராட்டி வரவேற்பர்.

—ஹிந்துஸ்தான்
30.7.87

கொள்கை அளவிலான நீடித்த அமைப்பு முறையிலான மற்றும் விரிந்த அரசியல் பொருளில் துணிகரமான, புரட்சி மிக்க முடிவெடுத்ததற்காக திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனவும் சமமான பாராட்டைப் பெறுகிறார்கள். தீவு நாட்டின் இனப் பிரச்சினைக்கு, ஜனநாயக ரீதியில், இரு நாட்டுத் தலைவர்களுக்கும் உடன்பாடான உடனடியான தீர்வு ஒன்றைக் காணும் நட்பு ஒப்பந்தம். இந்தத் தருணத்தில் பிரச்னையின் சில கூறுகளை எளிதில் தீர்க்க முடியாது போல் தோன்றினும், இவ்வுடன்பாடு நீடித்த, நடுநிலையான, விரிவான தீர்வை நோக்கியதாகும்.

—ஹிந்து
1.8.87

திரு. ராஜீவ் காந்தியும், முக்கியமாக, திரு. ஜெயவர்த்தனவும் தங்களது அரசியல் திறன், அறிவுத் திறன் கொண்டு இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். ஒப்பந்தம் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டால், இலங்கை நாட்டின் ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பிற்கு உறுதி செய்வது மூலம் இலங்கை ஒரே நாடாக விளங்க வகை செய்யலாம். இலங்கை நாட்டின் விவகாரங்களில் சிறுபான்மையினருக்கு தகுந்த இடம் அளிப்பதற்கு உறுதி செய்யலாம். திரு. ராஜீவ் காந்தி வெளிநாட்டு கொள்கையில் கண்ட முதல் பெரிய போற்றப்பட வேண்டிய சாதனை இது.

—டிரிபியூன்
31.7.87

அதிபர் ஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் சங்கடமான விளிம்பு நிலையை தவிர்த்து விட்டனர். அமைதியற்ற சூழ்நிலையிலுள்ள இச்சமயத்தில் இது சிறிய லாபமல்ல. இரு தலைவர்களும் மாபெரும் தீரத்தை வெளிக்காட்டியுள்ளனர்.

—டைம்ஸ் ஆஃப் இந்தியா
30.7.87

அதிபர் ஜெயவர்த்தனவும் திரு. ராஜீவ் காந்தியும் இலங்கையில் புதனன்று கையெழுத்திட்ட ஒப்பந்தம் மகிழ்ச்சிக்குரிய செய்தி. இதன் மூலம் இலங்கை இனப் பிரச்னை சுமுகமான தீர்வு அடையும் என்ற நம்பிக்கை வலுப் பெற்றுள்ளது.

—ஸ்டேட்ஸ்மென்
31.7.87

புது டெல்லியும் கொழும்பும் நல்லெண்ணம் கொண்டு கையெழுத்திட்ட ஒப்பந்தம் சர்ச்சைக்குரிய விஷயமல்ல. இருப்பினும் ஒப்பந்தத்தை செயலாக்குவதில் சில தடைகளை கடக்க வேண்டியதை மறுக்க இயலாது.

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்
31.7.87



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை இனப் பிரச்சினைக்கான ஒப்பந்தம் அதிபர் ஜெயவர்த்தன தன் நாட்டின் ஒருமைப்பாட்டை பேணிக் காக்க வகை செய்ததோடு தமிழ் சிறுபான்மையினரின் நியாயமான விருப்பங்களுக்கும் வழி வகுத்தார்.

—இந்தியன் எக்ஸ்பிரஸ்
29.7.87

இலங்கை அதிபர் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்ட ஒப்பந்தம் வரலாற்று சிறப்பு மிக்கது. இலங்கையில் அமைதி மற்றும் சுமூக நிலையை ஏற்படுத்தியதோடு இரு அண்டை நாடுகளின் பரஸ்பர உறவும் வலுப்பெற வகை செய்துள்ளது.

—அசாம் டிரிபியுன்
31.7.87

ராஜீவ் காந்தியும் ஜூனியஸ் ஜெயவர்த்தனவும் காட்டியது மாபெரும் தீரம் மற்றும் மனோதிடம். இவ்விரு குணங்களை தலைவர்கள் பெற்று விட்டால் அவர்களை வெல்வது கடினம்.

—சண்டே
9.8.87

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் பெரிய அளவிலான கண்ணோட்டத்தில்—இலங்கைத் தமிழர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும்; இலங்கை வாழ் மக்களின் எதிர் காலம், நல்வாழ்வு ஆகியவற்றுக்கு வழி வகுக்கும்; இந்தியாவின் தேசிய மற்றும் ஜனநாயகத் தேவைகளை பூர்த்தி செய்யும்; ராஜீவ் அரசின் பெருமிதம் கொள்ளும் வெளியுறவுக் கொள்கை இது. வரும் ஆண்டுகளில் இந்திய வெளியுறவுக் கொள்கையில் இது ஒரு மாபெரும் வெற்றிச் சின்னம்.

..பிரண்ட் லைன்
8.8.87

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE , FRANCE



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு:

ஈழம் கலைகள் சமூக விஞ்ஞான கழகம் (ஆசியா)
பிரான்சு.

Published by:

Art Social Sciences of Eelam Academy(ASSEA)

3 Alleé Paul Leautaud,

95200 Sarcelles,

FRANCE.

படிப்பகம்